**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலுள்ள TN–43–G–0385 வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.2) துறை**

**அரசாணை(ப) எண்.158**

நாள்: 27.06.2019
விகாரி, ஆனி 12
திருவள்ளுவர்ஆண்டு 2050

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முகக் கடிதம் எண்.பி2/293/2016, நாள் 01.01.2019.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.2937/2018/ஜி2, நாள் 22.02.2019

-------

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலுள்ள அம்பாஸிடர் சீருந்து TN–43–G–0385 அரசாணை(ப) எண்.219, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி2) துறை, நாள் 08.04.2008ன்படி, 19.05.2008ல் புதிதாக வாங்கப்பட்டது. மேற்படி வாகனம் பத்து வருடங்கள் கடந்த நிலையில் 1,07,317கி.மீ. தூரம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு அதிக செலவினம் செய்யப்படுவதைத் தொடர்ந்து இவ்வாகனத்தை கழிவு நீக்கம் செய்ய பரிந்துரை செய்யுமாறு நீலகிரி மாவட்ட அரசு தானியங்கி பணிமனை பொறியாளர் அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. சென்னை, வேளச்சேரி, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் செ.மு.மூ.மு. எண்.எச்1/14945/2018, நாள் 13.12.2018ல் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், தொழில்நுட்ப வல்லுநர் அறிக்கையில் மேற்படி வாகனம் விற்பனை செய்யப்பட்டால் எதிர்பார்க்கப்படும் தொகை ரூ.40,500/–என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலுள்ள TN–43–G–0385 வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து விற்பனை செய்திட அரசின் அனுமதியை பெற்றுத் தருமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார். பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள், நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலுள்ள வாகனத்தை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய ஆணை வழங்கக்கோரி கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

..2

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி, வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, சென்னை மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்தவாறு நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலுள்ள சீருந்து TN–43–G–0385 ஏலத்தில் விடப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் தொகையான ரூ.40,500/– அல்லது மேற்படி வாகனம் ஏலம் விடப்படும் தொகை ரூ.40,500/–க்கும் மேலாக இருக்குமாயின் அத்தொகையை உடனடியாக உரிய அரசு கணக்கில் செலுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன், நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் TN–43–G–0385 எண் கொண்ட சீருந்தினை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி.
இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை–42.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், நீலகிரி மாவட்டம்.

<u>நகல்</u>

நிதி (ஊ.வ) துறை, சென்னை–9.
உள்(போக்குவரத்து–4) துறை, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
27/6/2019